Power house near Paraliaru

* 220 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state whether there is a proposal to construct a power house with a view to utilise the waters of the Paraliaru above the Perunchani Dam in Kanniyakumari district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்தத் திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்? திட்டத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த பரலியாறு மின் நிலையத் திட்டத்தைப் பொறுத்த வரையில் இந்திய மின் விசைக் குழுவிற்கு 1971-ஆம் ஆண்டு மார்ச் மாதம் மின் வாரியம் ஒரு திட்டத்தை அனுப்பியது. அத்திட்டம் மத்திய மின்சாரக் குழுவின் பரிசீலனையில் இருக்கிறது. அவர்கள் சில விளக்கங்களைக் கேட்டிருக்கிறார்கள். அந்த விளக்கங்களையும் 1975-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அனுப்பி இருக்கிறோம். அதற்குப் பதில் வந்த பிறகுதான் மேற்கொண்டு என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது தெரியும்.

திரு. என். டென்னிஸ்: இந்தத் திட்டம் ரூ. 563 லட்சம் செலவாகக் கூடிய ஒரு திட்டம். இத் திட்டம் செயலாக்கப்பட்டால் 35 மெகாவாட் மின்சாரம் ஜெனரேட் செய்ய முடியுமென்று திட்ட மிடப்பட்டிருக்கிறது. 1971-ஆம் ஆண்டிலிருந்து இது ஒரு லாங் பெண்டிங் மேட்டராக இருந்து வருகிறது. ரூ. 5½ கோடி எஸ்டிமேட் உள்ள இத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றா விட்டால் மாநில அரசே இதை நிறைவேற்றுவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இது மத்திய அரசின் 'சென்ட்ரல் வாட்டர் பவர் கமிஷன் பரிசீலனையில் இருக்கிறது. மாநில அரசு இதை நிறைவேற்று கின்ற பிரச்சினை தற்போது எழவில்லை.